**பாததும்பர பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 27 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 மே 18 ஆம் திகதியும் விரிவான கணக்காய்வு முகாமைத்துவ அறிக்கை 2020 மே 31 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் பாததும்பர பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | திரண்ட நிதிய மீதி ரூபா 25,777,389 குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சரி செய்வதாக அறிவிக்கிறேன். |
| (ii) | முற்பண வருமான கணக்கு மீதி ரூபா 864,678 குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சரி செய்வதாக அறிவிக்கிறேன். |
| (iii) | பெற வேண்டிய வீதவரி ரூபா 507,535 குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | சபை வீதவரி மென்பொருளின் பிரச்சினை காரணமாக இக் குறைபாடு ஏற்பட்டுள்ளது. சீர் செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (iv) | மீளாய்வாண்டு இறுதி 06 மாதங்களிற்காக பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | வருமான பரிசோதகர்களுக்கும் நீதிமன்ற பதிவாளருக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (v) | ஈ - நென பியச கணக்கு மீதி ரூபா 82,246 ஆன போதும் அது ரூபா 117,873 ஆக குறிப்பிடப்பட்டதால் ரூபா 35,627 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதாக அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (vii) | ஊழியர் பிணை வைப்பு முதலீடு ரூபா 367,739 ஆன போதும், அதன் பொறுப்பு ரூபா 131,353 ஆக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதாக அறிவிக்கிறேன். |

**(ஆ) எதிர்பாராத பொறுப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 திகதிக்கு சபைக்கு எதிராக 16 வெளி தரப்பினர்கள் வழக்கு தாக்கல் செய்திருந்ததுடன், அது தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்று மூலம் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | எதிர்பாராத பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | 2020 நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது கணக்கீட்டு குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**(இ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் கூட்டுத் தொகை ரூபா 162,392,470 ஆன 11 கணக்கு விடயங்களிற்குரிய மீதிகள் மற்றும் உபயோகப் பதிவேடுகளில் காட்டப்படும் மீதிகளிற்கிடையில் ரூபா 8,673,170 வித்தியாசம் ஆனது. | தொடர்புடைய மீதிகளின் வித்தியாசத்தை இணக்கஞ் செய்து கணககீடு செய்ய வேண்டும். | இவ் வித்தியாசத்தை கண்டறிந்து தீர்த்துக் கொள்வதாக அறிவிக்கிறேன். |

**(ஈ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 1 முதல் 3 ஆண்டுகள் வரையான காலத்திற்குரிய பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 7,968,826 மற்றும் 3 ஆண்டுகளை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 724,002 உம் ஆனது. | பெற வேண்டிய மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | இம் மீதிகளை கண்டறிந்து விரைவில் தீர்ப்பதாக அறிவிக்கிறேன். |
| (ii) | 1 முதல் 3 ஆண்டுகள் வரையான காலத்தை விஞ்சியிருந்த செலுத்த வேண்டிய மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 29,600,752 மற்றும் 3 ஆண்டுகளை விஞ்சிய மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 3,883,094 ஆனது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | இம் மீதிகளை கண்டறிந்து விரைவில் தீர்ப்பதாக அறிவிக்கிறேன். |

**(உ) கணக்காய்விற்கு தேவையான எழுத்து மூல சான்றுகளின்மை**

| | | |
|---|---|---|
| ரூபா 107,738,706 பெறுமதியான 03 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு, அட்டவணைகள் போன்ற சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் காட்டப்படும் கணக்கு மீதிளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்பிக்கப்பட வேண்டும். | பதிவேடுகளை நாளாதுவரையாக்கவும், 2020 நிதிக் கூற்றுக்களுடன் அட்டவணைகளை வழங்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 1.4 இணங்காமை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571(3) | 2 வருடங்களை விஞ்சிய ரூபா 1,626,977 பெறுமதியான 126 பொது வைப்புகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் செயற்பட வேண்டும். | ஒப்பந்தக்காரர்கள் கோரியுள்ள பிணை வைப்புகளை விடுவிப்பதற்கு மற்றும் நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | 2010 நவம்பர் 24 திகதிய உள்ளூராட்சி ஆணையாளர் சுற்றறிக்கை 5/2010 | தகைமை பூர்த்தியாகாத பொது மக்கள் தொடர்பாடல் பெண் அலுவலர் ஒருவரை நியமித்து 2018 ஆகஸ்ட் முதல் 2019 திசெம்பர் வரை ரூபா 141,000 சம்பளமாக வழங்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை படி தகைமை பரீட்சிக்கப்பட்டு நியமிக்க வேண்டும். | ஜயவினாவில் குறிப்பிடப்படும் குறைபாடுகள் தவிர ஏனைய தகைமைகளை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 14,423,583 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 9,876,032 ஆனது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 5,530,000 | 5,850,455 | 4,003,755 | 4,159,134 | 7,083,000 | 7,486,367 | 8,149,308 | 4,313,761 |
| (ii) | வாடகை | 5,248,400 | 3,481,842 | 2,947,656 | 881,866 | 657,000 | 2,127,950 | 2,137,240 | 412,211 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,150,500 | 2,300,000 | 2,803,810 | 568,708 | 2,200,000 | 2,200,000 | 2,420,040 | (220,040) |
| (iv) | ஏனைய வருமானம் | 33,266,500 | 21,420,155 | 2,654,679 | 313,158 | 12,986,720 | 14,385,688 | 1,924,688 | 21,290,519 |
| | | 45,245,400 | 33,052,452 | 12,409,900 | 5,922,866 | 22,926,720 | 26,200,005 | 14,631,276 | 25,796,451 |

### 2.2.2 கடை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1996 ஆண்டு முதல் முன்கொண்டு வரப்படும் இறைச்சிக் கடைகளை குத்தகைக்கு வழங்கி பெற வேண்டிய வருமானம் ரூபா 313,158 அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறவிட வேண்டிய பணத்தை அறவிட வேண்டும். | நிதிப்பிரமாணம் 104 பரிசோதனை ஒன்று நடப்பதால் அதன் தீர்மானப் படி நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கிறேன். |

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறவேண்டியதாக இருந்த நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 385,412 மற்றும் ரூபா 23,317,474 ஆனது. | குறித்த பணத்தை சபைக்கு பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த நிறுவனம் மற்றும் வருமான பரிசோதகர்கள் அறிவூட்டப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) **உப விதிகள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை செய்வதற்காக உப விதிகள் விதிக்கபட வேண்டிய போதும் 18 விடயங்களிற்கு மாத்திரம் உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தது. | சபைக்கு வருமானத்தை ஈட்டக் கூடிய உப விதிகளை விதித்து வருமானம் ஈட்டுவதத்தை செய்ய வேண்டும். | உப விதிகளை விதிக்க நடவடிக்கை எடுப்பதாக அறவிக்கிறேன். |

(ஆ) **எதிர்பார்த்த விளைவுகள் (0ut come) பெற்றுக்கொள்ளப்படாமை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2014 ஆண்டு ரூபா 1,980,000 செலவில் நிர்மாணிக்கப்பட்ட அளுத்கம சந்தை பயன்படுத்தப்படாது விளைவற்று நிலவியது. | எதிர்பார்த்த விளைவுக ளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | முறையாக பயன்படுத்த பொது மக்களை அறிவூட்டி தொடர்ந்து செயற்படுத்த நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**(இ) சுற்றாடல் பிரச்சினை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மடவள நகர் அருகினால் ஓடும் பளதொட்ட ஓடைக்கு இடையூரான வகையில் அனுமதியற்ற நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், ஓடைக்கு கழிவுகளை எறிவதால் ஓடை அசுத்தமடைந்திருந்தது. அனுமதியற்ற நிர்மாணம் மற்றும் கழிவுளை எறிபவர்களின் விபரங்களை கண்டறிந்து அது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சூழலை பாதிக்கும் வகையில் கழிவுகளை அகற்றாமை. | இந் நிலைமையை தவிர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்க இலக்குகளை போதியளவு இனங்கண்டிருக்காததுடன், அது தொடர்பாக போதியளவு கடப்பாடுகளை மேற்கொண்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 வரவு செலவு திட்டத்தில் ஏற்பாடுகளை ஒதுக்கி 2020 இற்குள் வினைத்திறனுடன் பயன்படுத்த நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பாததும்பர மற்றும் குண்டசாலை பிரதேச சபைகள் இரண்டும் ஒன்றிணைந்து சமமாக வருமான செலவுகளை பகிர்ந்து கொள்வதற்காக உடன்படிக்கை செய்த கருத்திட்டத்திற்காக பாததும்பர பிரதேச சபையினால் ரூபா 3,339,857 செலவு மேற்கொள்ளப்பட்ட போதும் இவ்வித வருமானமும் கிடைத்திருக்கவில்லை. | உடன்படிக்கை பிரகாரம் செயற்பட்டு இக் கருத்திட்டத்தை ஒழுங்கமைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தொடர்பாக குறித்த நிறுவனம் அறிவுருத்தப்பட்ட போதும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என அறிவிக்கிறேன். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 15 ஊழியர் வெற்றிடங்களும் 2 ஊழியர் மிகையும் ஆனது. | ஊழியர் வெற்றிடங்கள் நிரப்பிக்கொள்ள நடவடிக்கை எடுக்க வெண்டும். | புதிய அரசின் கொள்கையளவான தீர்மானத்தின் படி ஆட்சேர்ப்பு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | இடம் மாறிச் சென்ற 7 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படாத ரூபா 816,847 ஆன கடன் மீதி நிலவியது. | நிலுவை ஊழியர் கடன் மீதிகளை அறவிட வேண்டும். | இவ் ஊழியர்கள் இடம் மாறிச் சென்ற நிறுவனங்களில் இருந்து தொடர்ந்து கடன் தவணை அறவிடப்படுவதாகவும் வேலையை விட்டுச் சென்ற ஊழியர் தொடர்பாக பிணையாளி அறிவூட்டப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கிறேன். |

**3.4 சொத்துக்கள் முகாமைதுவம்**

**விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்கு சொந்தமான ரூபா 6,794,115 பெறுமதியான 09 வாகனங்கள் 05 – 10 வருட அளவு காலமாக விளைவற்று நிலவுவதுடன், அவ் வாகனங்களை சீரான நிலைக்கு ஆக்கிக் கொள்ள அல்லது ஏலவிற்பனை செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிரயோசனப்படுத்த முடியாத வாகனங்களை பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது வாகனங்களை பயன்படுத்த முடியாத நிலை நிலவுவதால் ஏலவிற்பனை செய்ய சபை தீர்மானித்துள்ளது என அறிவிக்கிறேன். |